# மாலைக்கதிர்
Maalaikkathir






சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 17 வெள்ளிக்கிழமை 03.10.2025 கதிர் 328

## காற்றாலை போராட்டத்துக்கு பின்னால் முன்னாள் அரசியல்வாதிகள் – கடற்றொழில் அமைச்சர்!



மன்னார், ஒக் .03


மன்னார் காற்றாலைக்கு எதிரான போராட்டத்திற்கு பின்னால் முன்னாள் அரசியல்வாதிகள் உள்ளதாக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இன்றையதினம் யாழ்ப்பாணம் - சங்கானையில் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் காற்றாலை அமைப்பதற்கு திறப்புவிழா நடாத்தியவர்கள், காற்றாலைகளுக்கு பின்னால் ஓடியவர்கள், அந்த காற்றாலை கம்பனிகளுகளிடம் கொடுக்கல் வாங்கல் மேற்கொண்டவர்கள் முன்னைய அரசியல்வாதிகள். அந்த காவாலித்தனமான அரசியல்வாதிகளே இந்த போராட்டத்தின் பின்னால் இருக்கின்றனர்.

நாங்கள் கூறுவது யாதெனில், இது மக்களது பிரச்சினையாக இருக்குமாக இருந்தால், இது மன்னாருடைய பிரச்சியையாக இருக்குமாக இருந்தால், இந்த பிரச்சினையால் 7



# மன்னார் காற்றாலை திட்டத்திற்கு எதிராக மட்டக்களப்பில் போராட்டம்

*மன்னார், ஒக் .03*

*மன்னார் காற்றாலை திட்டம் உட்பட கிழக்கு மாகாணத்திலும் அபிவிருத்தி என்ற பெயரில் மக்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்துவதாக தெரிவிக்கப்படும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக மட்டக்களப்பில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.*

*கிழக்கு மாகாண சிவில் சமூக அமைப்புகள் மற்றும் பொது அமைப்புகள் இணைந்து இந்த போராட்டத்தினை காந்திபூங்காவில் உள்ள ஊடகவியலாளர்கள் நினைவுத்தூபிக்கு முன்பாக முன்னெடுத்துள்ளனர்.*

*மக்களின் வாழ்வாதாரத்தினையும் இயற்கை சமநிலையினையும் பாதிக்கும் அபிவிருத்தி திட்டங்களை நிறுத்துக என்ற தொனிப்பொருளிலேயே போராட்டம் இடம்பெற்றுள்ளது.*

*போராட்டத்தில் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலிருந்து சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.* 7

## யாழ். நவாலி பகுதியில் வெடிபொருட்கள் கண்டுபிடிப்பு!

மானிப்பாய் , ஒக் .03

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நவாலி வடக்கு நாச்சிமார் கோவில் வீதியில் உள்ள காணி ஒன்றிலிருந்து வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குறித்த காணியை பண்படுத்திய வேளையில் இந்த வெடிபொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து மானிப்பாய் பொலிசாருக்கு தகவல் வழங்கப்பட்டது. 7

## அர்ச்சுனா எம்பியும் சிறைசெல்ல நேரிடும் இளங்குமரன் எம் .பி கடும் எச்சரிக்கை



யாழ்ப்பாணம் , ஒக் .03

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு பகுதிக்கு சில நாட்களுக்கு முன்பு வருகை தந்த பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா இங்கே சட்ட விரோத செயற்பாடுகள் இடம் பெறுவதாகவும் அதற்கு ஆளும் கட்சியே துணை போவதாக குத்துச்சாட்டை முன்வைத்திருந்தார்

இது தொடர்பாக வடமாட்சி கிழக்கிற்கு விஜயம் செய்த நாடாளுமன்ற 7

## கொழும்பு– கட்டுநாயக்க விமான சேவை மீள ஆரம்பம்



கொழும்பு, ஒக் .03

பெய்ரா ஏரியை நீர் விமான நிலையமாகப் பயன்படுத்தி கட்டுநாயக்கவிற்கும் - கொழும்புக்கும் இடையிலான விமான சேவைகள் இன்று அதிகாரப்பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் 7

## தனக்குத் தானே தீ மூட்டி உயிரிழந்த ஆசிரியர்



கிளிநொச்சி, ஒக் .03

கிளிநொச்சி பகுதியில் ஆசிரியர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் கிளி/ சென் திரேசா மகளிர் கல்லூரியின் ஆசிரியர் விடுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

திருவையாறு மகா வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் பேரம்பலம் பரந்தாமன் என்ற 7

## சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முக்கிய அறிவித்தல்!

கொழும்பு, ஒக் .03

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அறிவித்தலினை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இணையவழி விண்ணப்பம் செப்டம்பர் 18ஆம் திகதி முதல் இணையவழி ஊடாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்தநிலையில் இணையவழி விண்ணப்பக் காலம் ஒக்டோபர் 9ஆம் திகதி அன்று நள்ளிரவு 12.00 மணிக்குப் பிறகு மூடப்படும் என்று இலங் கைப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித துள்ளது.

அதுடன் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதி திகதி எந்த காரணத்திற்காகவும் நீட்டிக்கப்படாது என்றும், இறுதி திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பது கட்டாயம் என்றும் பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக ஏதேனும் வினவ வேண்டுமானால் 0112-784208ஃ 0112-784537ஃ 0112-785922 ஆகிய தொலைபேசி இக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 0112-784422 என்ற தொலைநகல் எண் அல்லது பஉநழடநஒயளௌடளுபஅயடை. உழஅ என்ற மின்னஞ்சல் முகவரி மூலமாகவும் வினவ முடியும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி பகுதியில் டிப்பர் வாகனங்கள் நேருக்கு நேர் மோதி விபத்து- சாரதிகள் வைத்தியசாலையில் அனுமதி!

கிளிநொச்சி , ஒக் .03

கிளிநொச்சி பகுதியில் இரண்டு டிப்பர் வாகனங்கள் நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த விபத்து கிளிநொச்சி முகமாலை வேம்படுகேணி பகுதியில் ரயில் கடவைக்கு அருகில் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாண திசையிலிருந்து பயணித்த டிப்பர் வாகனமும், கிளிநொச்சி திசையிலிருந்து பயணித்த மற்றொரு டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதியுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி பயணித்த பேருந்து ஒன்று மக்களை இறக்குவதற்கு குறித்த பகுதியில் தரித்து நின்ற வேளையில், அதனை டிப்பர் வாகனம் ஒன்று முந்தி செல்ல முற்பட்ட போதே இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் சிக்குண்ட ஒரு டிப்பர் வாகனம் ரயில் மார்க்கத்தில் கவிழ்ந்த நிலையில், பெக்கோ இயந்திரம் மூலம் அதனை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

விபத்து சம்பவத்தின் போது டிப்பர் வாகன சாரதிகள் காயமடைந்த நிலையில், பளை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பளை பொலிசார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உயிர் பலி எடுத்த கோர விபத்து – ஐவர் வைத்தியசாலையில்

கொழும்பு, ஒக் .03

தனமல்வில-வெல்லவாய வீதியில் கிதுல்கோட்டை பகுதியில் இன்று (03) காலை நடந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன், மேலும் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.

தனமல்வில திசையிலிருந்து வெல்லவாய திசை நோக்கிச் சென்ற வேனின் சாரதிக்கு நித்திரை கலக்கம் ஏற்பட்டதால் வாகனம் வீதியை விட்டு விலகி மரத்தில் மோதியுள்ளது.

விபத்தில் காயமடைந்த வேனின் சாரதி உட்பட ஆறு பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர்களில் ஒருவர் உயிரிழந்தார்.

அவிசாவளை பகுதியில் உள்ள ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் பணிக்காக சென்று மீண்டும் புத்தளவுக்குத் திரும்பிக் கொண்டிருந்த குழுவே இந்த விபத்திற்கு முகம் கொடுத்துள்ளது.

வேனின் சாரதிக்கு 18 வயது என்பதுடன், இறந்தவர் தம்புள்ளையைச் சேர்ந்த 56 வயதானவர் என தெரியவந்துள்ளது.

காயமடைந்தவர்கள் தனமல்வில பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், கவலைக்கிடமாக இருந்த மூன்று பேர் மேலதிக சிகிச்சைக்காக ஹம்பாந்தோட்டை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். காயமடைந்தவர்கள் 23, 35 மற்றும் 49 வயதுடையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். விபத்து குறித்து தனமல்வில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.






# புற்றுநோய் செல்களைக் கொல்லும் ஊட்டச்சத்து மருந்து கண்டுபிடிப்பு


கொழும்பு, ஒக் .03

புற்றுநோய் என்பது மனித உயிருக்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தும் ஒரு நோய்.

அதனால்தான் உலகம் இப்போது அதற்கான மருந்தைக் கண்டுபிடிப்பதில் கவனம் செலுத்தியுள்ளது.

இதுபோன்ற சூழலில், கொழும்பு பல்கலைக்கழகத்தின் உயிர்வேதியியல், மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப நிறுவனம், புற்றுநோய் செல்களைக் கொல்லும் ஊட்டச்சத்து மருந்தைக் கண்டுபிடிப்பதில் வெற்றி பெற்றுள்ளது.

மனித உடலின் ஒரு பகுதியில் அசாதாரண செல்களின் கட்டுப்பாடற்ற வளர்ச்சி புற்று நோய் என்று அழைக்கப்படுவதுடன், அது ஆரம்ப கட்டத்தில் கண்டறியப்பட்டு சிகிச்சை யளிக்கப்படாவிட்டால், அது மரணத்திற்கு கூட வழிவகுக்கும்.



உலகளவில், ஒவ்வொரு ஆண்டும் சுமார் 10 மில்லியன் மக்கள் புற்றுநோயால் இறப்பதுடன், இலங்கையில், ஒவ்வொரு ஆண்டும் புற்றுநோயால் இறக்கும் மக்களின் எண்ணிக்கை 15,000 முதல் 20,000 வரை காணப்படுகிறது.

இந்த சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, உலகளவில் மற்றும் உள்ளூர் அளவில் ஒவ்வொரு நாளும் புற்றுநோய் பரவுவதில் விரைவான அதிகரிப்பு ஏற்பட்டுள்ள அதே நேரத்தில், புற்றுநோயை எதிர்த்துப் போராட வேண்டியதன் அவசியத்தில் உலகின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, புற்றுநோய்க்கு எதிரான உலகளாவிய போராட்டத்தில் ஒரு முக்கியமான மைல்கல்லைக் குறிக்கும் வகையில், என்டோரோமைக்ஸ் எனப்படும் வெற்றிகரமான புற்றுநோய் தடுப்பூசியை தயாரிப்பதில் ரஷ்யா சமீபத்தில் வெற்றி பெற்றுள்ளதாக அறிவித்தது.

இந்த சூழலில், 2008 முதல் சுமார் 17 ஆண்டுகளாக நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் விளைவாக, கொழும்பு பல்கலைக்கழகத்தின் உயிர்வேதியியல், மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப நிறுவனம் புற்றுநோய் செல்களைக் கொல்லும் ஊட்டச்சத்து மருந்தைக் கண்டுபிடிப்பதில் வெற்றி பெற்றுள்ளது.

புற்றுநோய் செல்களைக் கொல்லும் இந்த ஊட்டச்சத்து மருந்து, மூலக்கூறு உயிரியல் மற்றும் நெட்வொர்க் மருந்தியல் போன்ற நவீன அறிவியல் முறைகளைப் பயன்படுத்தி 05 மருத்துவ தாவரங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது.

வெர்னோனியா ஜெய்லானிகா, (**Vernonia zeylanica**) நிஜெல்லா சாடிவா, (**Nigella sativa**) ஹெமிடெஸ்மஸ் இண்டிகஸ், (**Hemidesmus indicus**) லூகாஸ் ஜெய்லானிகா (**Leucas zeylanica**) மற்றும் ஸ்மைலாக்ஸ் கிளாப்ரா (**Smilax glabra**) ஆகிய தாவரங்களிலிருந்து பெறப்பட்ட மருந்துகளின் கலவையானது புற்றுநோய் செல்களை அழிக்கக்கூடும் என்று பேராசிரியர் சமீரா ஆர். சமரக்கோன் உள்ளிட்ட ஆய்வில் ஈடுபட்டுள்ள குழுவினர் கூறுகின்றனர். (ஐ)

## ஒரு கோடி பெறுமதியான ஸ்மார்ட் போன்கள் உள்ளிட்ட பொருட்கள் பறிமுதல்

கட்டுநாயக்க விமான நிலையத்தின் வழியாக சுங்க வரி செலுத்தாமல் சட்டவிரோதமாக கொண்டு சென்றதாகக் கூறப்படும் ஒரு கோடி ரூபாவிற்கும் அதிக பெறுமதியான கையடக்க தொலைபேசிகள், வாசனை திரவியங்கள் உள்ளிட்ட பொருட்களுடன் நான்கு பேரை மாளிகாவத்தை பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் இரு பெண்களும் அடங்குவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 26 ஸ்மார்ட் போன்கள், 10 ஐபேட்கள், 10 டெப்கள், 3 மடிக்கணினிகள், பல்வேறு வகை யான வாசனை திரவியங்கள் மற்றும் கிரீம்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டன. மாளிகாவத்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் டி.பி.எஸ். கல்யாணதுங்கவுக்கு கிடைத்த தகவலின்படி, மாளிகாவத்தை ரம்யா பகுதியில் நடத்தப்பட்ட சோதனையின் போது ஒரு வீட்டிலிருந்து இந்தப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. கடந்த 30 ஆம் திகதி டுபாய்க்குச் சென்ற சந்தேகநபர்கள், நேற்று நாடு திரும்பியபோது, இந்தப் பொருட்களை சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மாளிகாவத்தை மற்றும் கொச்சிக்கடை பகுதிகளை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் மாளிகாவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## எல்.பி.எல் ஆட்ட நிர்ணயம்– குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய முடிவு

கொழும்பு, ஒக் .03

2024 எல்.பி.எல் கிரிக்கெட் தொடரில் ஆட்ட நிர்ணயம் செய்த சம்பம் தொடர்பாக கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட தம்புள்ள தண்டர்ஸ் அணியின் உரிமையாளருக்கு எதிராக சட்டமா அதிபர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய முடிவு செய்துள்ளதாக விளையாட்டு ஊழல் தடுப்புப் பொலிஸ் பிரிவு இன்று கொழும்பு நீதவான் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது.

பங்களாதேஷ் வம்சாவளியைச் சேர்ந்த பிரித்தானிய பிரஜையான தமீம் ரஹ்மானுக்கு எதிராக இவ்வாறு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு இன்று (3) கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அசங்க எஸ். போதரகம முன் விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது, தமீம் ரஹ்மானும் நீதிமன்றத்தில் ஆஜரானார்.

அப்போது, விளையாட்டு ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் சந்தேக நபருக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய சட்டமா அதிபர்



முடிவு செய்துள்ளதாக விளையாட்டு ஊழல் தடுப்புப் பொலிஸ் பிரிவின் அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

அதன்படி, வழக்கைத் தொடங்க குறுகிய காலத்தை வழங்குமாறு அதிகாரிகள் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தனர். கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதவான், குறித்த முறைப்பாட்டை எதிர்வரும் டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி அழைக்குமாறு உத்தரவிட்டார். (ஐ)

## சொத்துக்களை இழக்கப்போகும் அரசியல்வாதிகள் பறிமுதல் செய்யவுள்ள அரசு! விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஒக் .03

அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகளால் சட்டவிரோதமாக குவிக்கப்பட்ட சொகுசு விடுதி மற்றும் வீடுகள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகிறது.

சட்டவிரோத சொத்துக்களை பறிமுதல் செய்யும் புதிய சட்டத்தின் கீழ், இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.


சட்டவிரோத சொத்துக்களை பறிமுதல் செய்யும் புதிய சட்டமூலம் அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த சட்டத்தின்படி, உரிமையாளர்கள் தங்களது சொத்துக்களை சேகரித்த வழிமுறையை நியாயப்படுத்த தவறினால் அல்லது முடியாவிட்டால், அவற்றை அரசு பறிமுதல் செய்ய முடியும்.

அதன்படி, சொத்துக்களின் உரிமையாளர்கள் தங்களது சொத்துக்கள் தொடர்பான சட்டபூர்வமான மூலங்களை நிரூபிக்க வேண்டும்.

இல்லை என்றால் தண்டனை விதிக்கப்படாமலேயே, சொத்துக்களை இழக்க நேரிடும் என இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ஐ)

## சாதாரண தர பரீட்சை மாணவர்களுக்கான விசேட அறிவிப்பு




கொழும்பு, ஒக் .03

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இணையவழி விண்ணப்பக் காலம் ஒக்டோபர் 9 ஆம் திகதியுடன் நிறைவடைகிறது.

அன்று நள்ளிரவு 12.00 மணிக்குப் பிறகு இணையவழி விண்ணப்ப முறை மூடப்படும் என்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

அதேநேரம் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதி திகதி எந்த காரணத்திற்காகவும் நீட்டிக்கப்படாது என்றும், இறுதி திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பது கட்டாயம் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் செப்டம்பர் 18 ஆம் திகதி முதல் இணையவழி ஊடாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக ஏதேனும் வினவ வேண்டுமானால், பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்: 0112-784208, 0112-784537, 0112-785922.

அத்துடன் 0112-784422 என்ற தொலைநகல் எண் அல்லது **gceolexansl@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரி மூலமாகவும் வினவ முடியும் என்று பரீட்சைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

## பாடசாலை பிளாஸ்டிக் பொருட்களுக்கு SLS சான்றிதழ் கட்டாயம்

2026 ஏப்ரல் 1 முதல் பாடசாலை மாணவர்கள் மற்றும் குழந்தைகள் பயன்படுத்தும் பிளாஸ்டிக் உபகரணங்களுக்கு SLS சான்றிதழ் கட்டாயமாக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தகம், வணிகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க இதனைத் தெரிவித்தார்.

அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அமைச்சர்,

குறித்த திகதியிலிருந்து, நிர்ணயிக்கப்பட்ட தரங்களைப் பூர்த்தி செய்யாத பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை முற்றிலும் தடைசெய்யப் படும் எனத் தெரிவித்தார்.

தற்போது, குழந்தைகளுக்குப் பால் வழங்கப் பயன்படும் பிளாஸ்டிக் போத்தல்கள், மாணவர்களின் மதிய உணவுப் பெட்டிகள், மற்றும் தண்ணீர் போத்தல்கள் பல்வேறு விலைகளில் சந்தையில் விற்கப்படுகின்றன. இவற்றில் சிலவற்றிற்கு தரச் சான்றிதழோ அல்லது பயன்பாட்டிற்கு ஏற்றவை என்பதைக் குறிக்கும் அடையாளமோ இல்லை.

நுகர்வோர் விவகார அதிகாரசபையின் தகவலின்படி, சில தயாரிப்புகளில் புற்றுநோய்க் காரணிகள் உள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு, 2026 ஏப்ரல் 1 முதல், உணவு மற்றும் திரவங்களைச் சேமிக்கப் பயன்படும் தரமற்ற பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனையைத் தடை செய்ய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (ஐ)

# திறந்து வைத்த 30 மாதங்களில் 12 லட்சம் பார்வையாளர்களைக் கவர்ந்துள்ளது கீழடி அருங்காட்சியகம் : முதல்வர் மு.க.ஸ்டாலின்



திறந்து வைத்த 30 மாதங்களில் 12 லட்சம் பார்வையாளர்களைக் கவர்ந்துள்ளது கீழடி அருங்காட்சியகம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். ராமநாதபுரத்தில் அரசு நிகழ்ச்சியில் பங்கேற்ற பின் கீழடி அருங்காட்சியகத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார். முதல்வரின் வருகையை முன்னிட்டு கீழடி அருங்காட்சியகத்தில் சுமார் 13,000 தொல்பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள பதிவில்,

“கீழடி கண்டேன், பெருமிதம் கொண்டேன்!

“வெளிமாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்து வருவோரும் தமிழரின் தொன்மை கவினுறக் காட்சிப்படுத்தப்பட்டிருப்பது கண்டு வியப்பதை இன்று திடீர் ஆய்வுக்காக அங்குச் சென்றபோது அறிந்துகொண்டேன்.

கீழடி திறந்தவெளி அருங்காட்சியகமும் வரும் ஜனவரியில் திறக்கப்பட இருக்கிறது.

பொருநை அருங்காட்சியகம் வரும் டிசம்பரிலேயே மக்கள் பார்வைக்குத் திறக்கப்பட உள்ளது.

கங்கைகொண்ட சோழபுரத்தில் மற்றுமொரு அருங்காட்சியகம் எழுந்து வருகிறது.

பூம்புகார் ஆழ்கடல் ஆய்வுகள் தொடங்கிவிட்டன.

நிலத்திலும், நீரிலும், இலக்கியத்திலும் ஆய்ந்து, இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாறு தமிழ்நிலத்திலிருந்து தொடங்கித்தான் எழுதப்பட வேண்டும் என்பதை உறுதிசெய்து வருகிறது நமது திராவிடன் மாடல் அரசு! இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஆந்திர பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்த காவலர்களுக்கு இரண்டு மடங்கு கூடுதல் தண்டனை தர வேண்டும்: ராமதாஸ்



ஆந்திர பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்த காவலர்களுக்கு 2 மடங்கு கூடுதல் தண்டனை தர வேண்டும் என பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் “கடந்த 30-ஆம் தேதி, திருவண்ணாமலை, ஏந்தல் பகுதியில் ரோந்து பணியிலிருந்த கிழக்கு காவல் நிலைய காவலர்கள் சுந்தர், சுரேஷ்ராஜ் இருவரும் ஆந்திராவிலிருந்து வந்த ஒரு மினி லாரியை மறித்து அதிலிருந்த 52 வயது தாயையும், 22 வயது மகளையும் தனியே அழைத்துச் சென்று தாயை அருகில் நிற்க வைத்து விட்டு, மகளை கூட்டுப் பாலியல் பலாத்காரம் செய்து, வெளியில் சொல்லக்கூடாது என்று மிரட்டி அனுப்பியுள்ளனர். அந்த 2 காவலர்களும் கைது செய்யப்பட்ட நிலையில், தாயின் கண்ணெதிரிலேயே நடைபெற்றுள்ள இந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பொது மக்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு சமூக விரோதிகளால் ஏற்படும் அசம்பாவிதங்களிலிருந்து பாதுகாப்பு தரவேண்டிய காவலர்களே “வேலியே பயிரை மேய்ந்த கதை”யாக இத்தகைய கொடூரத்தை அரங்கேற்றி இருப்பது அவமானகரமான செயலாகும்.

இந்தியா சுதந்திரம் பெற்ற போது “ஒரு பெண் பொன் ஆபரணங்கள் அணிந்து கொண்டு நட்ட நடு ராத்திரியில் தனியாக செல்கின்ற சூழல் எப்பொழுது நிலவுகிறதோ அன்று தான் முழு சுதந்திரம்” என்று மகாத்மா காந்தி கூறியுள்ளார். சுதந்திரம் பெற்று 78 ஆண்டுகள் கடந்த நிலையிலும், தாயுடன் வந்த இளம் பெண்ணுக்கு இத்தகைய அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. அதுவும் பாதுகாப்புத் தர வேண்டிய காவலர்களாலேயே இந்த கொடூரம் அரங்கேறி இருக்கிறது என்றால் நாட்டின் சுதந்திரம், பெண்களின் பாதுகாப்பு எந்த அளவில் உள்ளது என கேள்விகள் எழுகிறது.

சமூக விரோதிகளிடமிருந்து மக்களை பாதுகாக்க வேண்டிய காவலர்கள் தங்கள் பதவியின் பொறுப்பை உணராமல், அதிகார போதையில் அப்பாவிப் பெண்களை மிரட்டி இதுபோன்று அநாகரிகமாக நடந்து கொண்டிருப்பது கண்டிக்கவும், தண்டிக்கவும் தக்கது. ஒரு குற்றத்தை செய்தால் அந்த குற்றத்திற்கான தண்டனை என்ன என்று தெரிந்திருந்தும் இதுபோன்ற கொடூரமான செயலை செய்திருக்கின்ற இரு காவலர்களுக்கும் மற்ற குற்றவாளிகளுக்கு தருகின்ற தண்டனையை விட இரண்டு மடங்கு கூடுதல் தண்டனை தர வேண்டும். தயவு தாட்சண்யம் இன்றி துறை ரீதியான நடவடிக்கைகளை கடுமையாக்க வேண்டும் .

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு தமிழ்நாடு அரசு அதிகபட்ச நிவாரண நிதி வழங்குவதுடன், காவல்துறையில் உள்ளவர்களுக்கு பொதுமக்களிடம் மனிதநேயத்தோடு எவ்வாறு நடந்து கொள்வது என்பது குறித்த கவுன்சிலிங் கொடுக்கப்பட வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (ஐ)



# “நீதிமன்றத்தை அரசியல் மேடையாக்க வேண்டாம்” கரூர் கூட்ட நெரிசல் வழக்கை சிபிஐக்கு மாற்ற கோரிய அனைத்து மனுக்களும் தள்ளுபடி

கரூர் மாவட்டத்தில் விஜய் தலைமையில் நடைபெற்ற தவெக கூட்டத்தில் ஏற்பட்ட கூட்டநெரிசல் காரணமாக 41 பேர் உயிரிழந்தது தமிழக அரசியலை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இதையடுத்து, கரூர் கூட்ட நெரிசல் விசாரணையை சிபிஐக்கு மாற்றுவது, இது போன்ற கூட்டங்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்குவது, இழப்பீட்டை உயர்த்தி வழங்குவது போன்ற கோரிக்கைகள் கொண்ட 7 பொதுநல வழக்குகள் நீதிபதிகள் தண்டபாணி, ஜோதிராமன் ஆகியோர் அமர்வில் ஒன்றன் பின் ஒன்றாக விசாரிக்கப்பட்டன.

வழக்குகள் விசாரணையின் போது நீதிபதிகள் எழுப்பிய கேள்விகளும் பிறப்பித்த உத்தரவுகளும்!!

கரூர் சம்பவத்தில் தமிழ்நாடு அரசு சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளது. அரசு நடவடிக்கை மேற்கொண்டாலும் மக்களும் சுய கட்டுப்பாடுடன் நடந்து கொள்ள வேண்டும். குறிப்பிட்ட சட்டத்தை இயற்றவேண்டும் என அரசுக்கு உத்தரவிட முடியாது.

பொதுக்கூட்ட வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்குவது குறித்த மனு, சென்னை அமர்வில் நிலுவையில் உள்ளது. இடைக்கால உத்தரவு பிறப்பித்தால் அதை பாதிக்கும். ஆகவே அந்த மனுவுடன் இவற்றையும் சேர்க்கக் கோரி இடையீட்டு மனுவாகத் தாக்கல் செய்ய வேண்டும்.

கரூர் கூட்ட நெரிசலில் இழப்பீடை உயர்த்தி வழக்கக் கோரிய வழக்கில் விஜய் மற்றும் அரசுத் தரப்பு 2 வாரங்களில் பதிலளிக்க உத்தரவிடுகிறோம்.

கட்சி கூட்டங்களில் அடிப்படை வசதிகள் கட்டாயம். தவெக பரப்புரையில் தண்ணீர் வசதி கூட செய்யாதது ஏன்?. தேசிய, மாநில நெடுஞ்சாலைகளில் பரப்புரைகளுக்கு அனுமதிக்க கூடாது. மாநில, தேசிய நெடுஞ்சாலை அருகே எந்த கூட்டமாயினும் நடத்தப்படக் கூடாது. பொதுக்கூட்டங்களில் அடிப்படை வசதிகள் செய்து தருவதை உறுதிப்படுத்தவேண்டும். குடிநீர், மருத்துவம், ஆம்புலன்ஸ், கழிவறை உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தர வேண்டும்.

கரூர் போலீசார் நடத்தி வரும் விசாரணை தொடக்க நிலையில் உள்ளபோது, சிபிஐ விசாரணை கோருவதா?.நீதிமன்றத்தை அரசியல் மேடையாக்க வேண்டாம். போலீஸ் விசாரணை திருப்திகரமாக இல்லை என்றால் மட்டுமே புகார் கூறலாம். உயிரிழந்தோரின் குடும்பங்களின் நிலையை யாராவது எண்ணி பார்த்தீர்களா?. சிபிஐ விசாரணை கோர பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்பில்லாத மனுதாரருக்கு என்ன தகுதியுள்ளது?. கரூரில் 41 பேர் பலியான வழக்கில் சிபிஐ விசாரணை கோரிய மனுக்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்கிறோம். (தேசிய மக்கள் சக்தி கட்சித் தலைவர் எம்.எல்.ரவி, பாஜக வழக்கறிஞர் ஜி.எஸ்.மணி தொடர்ந்த மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன) (ஐ)

# தொண்டர்களை பார்த்து பயம் கொள்பவர் உண்மையான தலைவர் கிடையாது: வீடியோவில் நடிகர் சத்யராஜ் மகள் பேச்சு

*தொண்டர்களை பார்த்து பயம் கொள்பவர் உண்மையான தலைவர் கிடையாது. தொண்டர்களைப் பார்த்து பயம் கொள்பவர் உண்மையான தலைவர் கிடையாது என நடிகர் சத்யராஜின் மகளும், திமுக தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில துணை செயலாளருமான திவ்யா சத்யராஜ் கூறியுள்ளார்.*

*இதுதொடர்பாக அவர் தனது சமூக வலைதளம் பக்கத்தில் வெளியிட்டுள்ள வீடியோவில் கூறியிருப்பதாவது:*

*த.வெ.க. தலைவர் விஜய்யின் பாதுகாவலர்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள். ஒரு பழைய வீடியோவில் உங்கள் பாதுகாவலர் உங்கள் தொண்டர் ஒருவரை வேனில் இருந்து தூக்கி வீசுவதை பார்த்தேன். அந்த பையனுக்கு முதுகுத்தண்டு அல்லது தலையில் காயம் ஏற்பட்டிருந்தாலோ, அல்லது அவர் கோமா நிலைக்கு சென்றிருந்தாலோ அவரது வாழ்க்கையே தொலைந்து போயிருக்கும். தொண்டர்களைப் பார்த்து பயப்படாதீர்கள். தொண்டர்களை தூக்கி வீசாதீர்கள். தொண்டர்களைப் பார்த்து பயப்படுபவர் உண்மையான தலைவர் கிடையாது. தொண்டர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பவர்தான் உண்மையான தலைவர். மக்களை ஆள வேண்டும் என்று நினைப்பவர் உண்மையான தலைவர் கிடையாது. மக்களுக்காக பல வருடங்களாக வாழ்பவரே உண்மையான தலைவர். இவ்வாறு வீடியோவில் பேசியுள்ளார்.*



*(ஐ)*





# வாழ்க்கையின் பூரணத்துவம்!

உடல்நலம், குடும்பம், வேலை, நட்பு வட்டம், சமூக வாழ்க்கை, வருமானம், உறவுகள் போன்ற பல அம்சங்களை உள்ளடக்கியதுதான் வாழ்க்கை. இந்த அம்சங்கள் எல்லாமும் எல்லாருக்கும் நூற்றுக்கு நூறு அமைந்து விடுகிறதா?

சிலருக்கு நல்ல உடல்நலமும் அமைதியான குடும்பச் சூழலும் இருக்கும். ஆனால், குழந்தைகளுக்கு நினைத்த கல்வியைக் கொடுக்கும் அளவுக்கு வருமானம் இருக்காது. சிலருக்கு வருமானம் இருக்கும், ஆனால் குடும்பத்தில் எல்லாரும் சேர்ந்து உணவருந்தகூட வாய்ப்பு இருப்பதில்லை. சிலருக்குக் குடும்பம், வருமானம் இருக்கும். ஆனால், நட்பு வட்டம் இருக்காது.

எல்லாம் இருக்கும் திருமணம் அமையாது. வேறு எல்லாம் இருக்கும் உடல்நலம் மட்டும் இருக்காது. இப்படி ஒவ்வொருவர் வாழ்விலும் ஏதோ ஒன்று.



### ஏன் இப்படி?

பொதுவாக எவ்வளவு நிறைகள் இருந்தாலும், நம் வாழ்வில் இல்லாத ஒன்றுதான், நமக்குக் கிடைக்காத ஒன்றுதான் நம்மை, நாம் குறைகளோடு இருக்கிறோம், நாம் பெர்ஃபெக்ட் அல்ல எனச் சொல்லி உறுத்திக்கொண்டே இருக்கும்.

இங்கு இயற்கையே குறைகளோடுதான் இருக்கிறது. ஆனால், அந்தக் குறைகளை அவற்றின் தன்மைகளாக ஏற்றுக்கொள்கிறோம்.

இங்கு இரவும் பகலும் சேர்ந்த ஒன்றை ஒரு நாளாக ஏற்பது, நமக்கு எளிதாகத்தான் இருக்கிறது.

வசந்தம், கோடை, மழை, இலையுதிர் பருவங்களை உள்ளடக்கிய காலத்தை ஒரு வருடமாக ஏற்றுக்கொள்வது எளிதாகத்தான் இருக்கிறது.

கடலின் அடி ஆழமும் மலை உச்சியும் சேர்ந்த ஒன்றை பூமி என்று அழைத்து அதன் மேல் வாழ்வதும் எளிதாகதான் இருக்கிறது.

தேயும் வளரும் நிலவை ரசிப்பதில் இங்கு மனத்திற்குத் தடையேதும் இல்லை. அது குறையாகத் தெரிவதில்லை. மாறாக நிலவின் தன்மையாகவே தெரிகிறது.

இவற்றின் முழுமையை, பூரணத்துவத்தை ஏற்றுக்கொள்வதிலும் இவற்றிற்காக நம்மைத் தகவமைத்துக்கொள்வதிலும் சிரமம் இருப்பதில்லை. பழகிக்கொண்டோம்.

வாழ்க்கையின் டிசைனும் அப்படித்தான். இந்த இயற்கையைப் போலவே குறைகளோடு முழுமையாகவே இருக்கிறது. ஒவ்வொருவரும் ஒவ்வொருவரின் வாழ்க்கையும் குறைகளோடு இருந்தாலும் பூரணத்துவம் நிறைந்ததாகவே, முழுமையானதாகவே இருக்கிறது.




ஏனென்றால் இந்தப் பிரபஞ்சத்தைப் பொறுத்தவரையில் 'குறைபாடற்றது' என்ற ஒன்று கிடையாது. வசந்தம்தான் நல்லது, அதுதான் எப்போதும் வேண்டும் என்றால் வசந்தம் எது என்பதே நமக்குத் தெரியாமல் போயிருக்கும். கோடை இருப்பதாலேயே வசந்தத்தின் மகத்துவம் புரிகிறது. குறை நிறைகளோடு இருக்கின்ற இயற்கையை எளிதாக ஏற்றுக்கொள்ளும் நம்மால், ஏன் நம்மையும் நம் வாழ்க்கையையும் பூரணத்துவம் மிக்க ஒன்றாக, முழுமையான ஒன்றாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை?

கொல்கத்தாவில் தோட்டக்கலை பூங்காவிற்கு **(Horticultural Garden)** சென்றிருந்தேன். அங்கு விசித்திரமான மரம் ஒன்று இருந்தது.

பொதுவாக மரத்தின் இலைகள் எல்லாம் ஒரே வடிவத்தில் தானே இருக்கும்? மாமரத்தை எடுத்துக்கொண்டால், அதன் இலைகளுக்கு என்று தனி வடிவம் இருக்கும். பார்த்தவுடன் நம்மால் மாமரத்தின் இலை என்று சொல்ல முடியும்.

ஆனால், அந்த விசித்திர மரத்திற்கு, அதன் இலைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக இருந்தது. அதற்கென்று தனி வடிவம் எதுவும் இல்லை. உண்மையில் அந்த மரத்தின் சிறப்பு குணம் அதுதான். ஆனால், அதற்கு நாம் வைத்த பெயர் 'அறிவு கெட்ட மரம்' **(Mad tree)**. ஏனென்றால் அது நமது வரையறைகளைப் பூர்த்தி செய்யவில்லை .

தோழி ஒருவர் படிப்பில் படு சுட்டி. நல்ல வேலையில், நல்ல ஊதியத்தில் இருக்கிறார். அவருடைய மகன் படிப்பில் கவனம் செலுத்துவதில்லை. பத்தாம் வகுப்பு ஃபெயில் ஆகிவிட்டான். அவருக்கு அது பெரிய மனச்சுமையாகவும் அவமானமாகவும் ஆகிவிட்டது. தான் ஒரு புத்திசாலி, ஆனால் தன் மகன் ஃபெயில் ஆகி விட்டான் என்பதுதான் கவலையின் காரணம். தனக்குப் படிப்பதில் ஆர்வம் என்றால், தன் மகனுக்கும் படிப்பில் ஆர்வம் இருக்க வேண்டுமா என்ன?

நான் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும். என்னுடைய குடும்ப உறுப்பினர்கள் இப்படித்தான் நடந்துகொள்ள வேண்டும். என்னுடைய வாழ்க்கைத் துணை இப்படித்தான், இந்த குணங்களுடன்தான் இருக்க வேண்டும் என வரையறைகளும் எதிர்பார்ப்புகளும்.

இதே போல்தான், நமக்கும் நம் வாழ்க்கையின் அங்கங்களுக்கும், சில எதிர்பார்ப்புகளையும் வரையறைகளையும் வைத்திருக்கிறோம். அந்த வரையறைக்குள் அடங்கவில்லை என்றால், உடனே அதைக் குறையாகப் பார்க்க ஆரம்பிப்போம். அது நம் வாழ்க்கையின் தனித்துவம் என்பதை ஏற்றுக்கொள்வதில் தயக்கம்.

குறைகள் ஒவ்வொன்றும் அதற்கான தனிச் சிறப்புகள். ஏனென்றால், பிரபஞ்சத்தில் இருக்கின்ற எல்லாரும் எல்லாமுமே நிசகநஉடவடல ைஅிநசகநஉவ.

அப்படியானால் குறைகளோடுதான் வாழ வேண்டுமா?

அதைக் குறைகளாக அல்லது பிரச்னைகளாகப்

(7ஆம் பக்கம் பார்க்க...)

# காஸாவிலிருந்து தெற்குப்பகுதியை நோக்கி வெளியேறும் மக்கள்: சாலையை மூடப்போவதாக இஸ்ரேல் ராணுவம் அறிவிப்பால் அச்சம்




காசா மக்களுக்கு இஸ்ரேல் இறுதி எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில், அங்குள்ள மக்கள் அவசர அவசரமாக வெளியேறி வருகின்றனர். இஸ்ரேல் - காஸா போரை முடிவுக்குக் கொண்டுவர உலக நாடுகள் பலவும் ஒருசேர குரல்கொடுத்து வரும்நிலையில், அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தனது 20 அம்ச அமைதித் திட்டத்தைப் பரிந்துரைத்துள்ளார். இப்பரிந்துரையில், போர் நிறுத்தம், ஹமாஸிடம் பிடிப்பட்டிருக்கும் பிணைக்கைதிகளை 72 மணி நேரத்திற்குள் விடுவித்தல், இஸ்ரேல் படிப்படியாக காஸாவிலிருந்து வெளியேறுதல் ஆகியவற்றை வலியுறுத்துகிறது.

அதேநேரத்தில், காஸாவில் மறுகட்டமைப்புக்கு உறுதியளிக்கும் இந்தப் பரிந்துரை, பாலஸ்தீன அரசமைப்பிற்கு எந்தப் பாதையையும் அமைக்கவில்லை எனக் கூறப்படுகிறது. இந்தத் திட்டத்திற்கு இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவும் ஒப்புதல் அளித்துள்ளார். இந்த அமைதித் திட்ட பரிந்துரைகளுக்கு ஹமாஸ் பதிலளிக்க அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. அப்படி பதிலளிக்கவில்லை என்றால் முடிவு மிக மோசமானதாக இருக்கும் என்று ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

இந்த நிலையில், காஸா நகரில் எஞ்சியுள்ள பாலஸ்தீனர்கள் உடனடியாக வெளியேற இதுவே கடைசி வாய்ப்பு என்றும், வெளியேற மறுப்பவர்கள் பயங்கரவாதிகளாகக் கருதப்படுவார்கள் என்றும் இஸ்ரேலிய அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் எச்சரித்துள்ளார். இதை அடுத்து தெற்கு பகுதிக்கு செல்லும் சாலை விரைவில் மூடப்படும் என இஸ்ரேல் ராணுவம் தெரிவித்தது. இதை தொடர்ந்து மக்கள் கையில் கிடைத்த உடமைகளுடன் தெற்கு பகுதியை நோக்கி விரைகின்றன. தெற்கு பகுதியில் அடிப்படை வசதி இல்லாத கூடாரங்களில் அவர்கள் தங்கி இருந்தனர்.

இதற்கிடையே, காஸாவை நோக்கி மனிதாபிமானஅடிப்படையில் நிவாரணப் பொருட்களுடன் வரும் படகுகளை இஸ்ரேல் தடுத்து நிறுத்தி வருகிறது. (ஐ)

## 4 வாரங்களில் சீன அதிபரை நேரில் சந்தித்து பேசுவேன்: அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவிப்பு



அமெரிக்க அதிபர் டிரம்ப், சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘சீனா பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று விரும்புவதால், நமது நாட்டின் சோயாபீன்ஸ்சை வாங்காததால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர். அதே நேரத்தில், வரி விதிப்பு மூலம் நாம் நிறைய பணத்தை சம்பாதித்துள்ளோம். அந்த பணத்தின் ஒரு சிறிய பகுதிகளை எடுத்து நமது விவசாயிகளுக்கு உதவ போகிறோம்.

நான் ஒருபோதும் நமது விவசாயிகளுக்கு பாதிப்பு உருவாக சம்மதிக்க மாட்டேன். அதிபராக இருந்தபோது தூக்கத்தில் இருந்த ஜோ பைடன் சீனாவுடன் எந்த ஒப்பந்தத்தையும் ஏற்படுத்தவில்லை. நான் நமது தேசபக்தர்களையும், விவசாயிகளையும் நேசிக்கிறேன். நான் 4 வாரங்களில் சீன அதிபர் ஜி ஜின்பிங்கை சந்திப்பேன். அவருடன் பேசும்போது சோயாபீன்ஸ் ஒரு முக்கிய விவாத பொருளாக இருக்கும்’ என்று கூறியுள்ளார்.

இது தொடர்பாக வெள்ளை மாளிகையில் நிருபர்களிடம் அதிபர் டிரம்ப் கூறியதாவது: சீன அதிபர் ஜி ஜின்பிங்வுடன் எனக்கு நல்ல தொடர்பு இருந்தது. அவர் டிக்டாக் செயலி தொடர்பான ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்தார். என்னால் சீனாவுடன் ஒரு ஒப்பந்தத்தை உருவாக்க முடிந்தது. இது எங்களுக்கு மிகவும் நல்ல ஒப்பந்தமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். அதிபர் ஜி ஜின்பிங்கிற்கு நன்றி சொல்ல விரும்புகிறேன். அவர் ஒரு ஜென்டில்மேன். எங்களுக்கு அவர்களுடன் ஒரு நல்ல உறவு உள்ளது’ என்றார். (ஐ)

## நிதி மசோதா தோல்வியால் அமெரிக்க அரசு நிர்வாகம் முடங்கியது

அமெரிக்க அரசு செலவினங்கள் தொடர்பான மசோதா அந்நாட்டு நாடாளுமன்றத்தில் ஒவ்வொர் ஆண்டும் நிறைவேற்றப்படும். இந்த மசோதா மூலமாகவே அரசின் ஒவ்வொரு துறைக்கும் ஒதுக்கப்படும் நிதிக்கு அனுமதி அளிக்கப்படும். அந்த வகையில், அமெரிக்க செனட் சபையில் நிதி மசோதா தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதா நிறைவேற 60 சதவீத வாக்குகள் தேவை. ஜனநாயக கட்சி உறுப்பினர்கள் மசோதாவுக்கு எதிராக வாக்களித்ததால், நிதி மசோதா நிறைவேற்றப்படவில்லை. இதையடுத்து நள்ளிரவு அமெரிக்க அரசாங்கம் முடங்கியதாக அறிவிக்கப்பட்டது. இதனால் அத்தியாவசியமற்ற பணிகளாள கருதப்படும் துறைகளில் பணியாற்றும் 7,50,000 அரசு ஊழியர்கள் கட்டாய விடுப்பில் அனுப்பப்பட உள்ளனர்.(ஐ)





## எத்தியோப்பியாவில் தேவாலய கட்டடத்தின் சாரம் சரிந்து விழுந்த விபத்தில் 36 பேர் உயிரிழப்பு!!

எத்தியோப்பியாவில் தேவாலய கட்டுமான பணியின்போது சாரம் சரிந்து விழுந்த விபத்தில் 36 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 200க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். கிழக்கு ஆப்ரிக்க நாடான எத்தியோப்பியாவின் தலைநகரான அடிஸ் அபாபாவில் இருந்து 70 கி.மீ., தொலைவில் அம்ஹாரா பிராந்தியத்தில் அரெர்டி நகரம் உள்ளது. இந்நகரில் உள்ள மென்ஜார் ஷென்கோரா அரேர்டி மரியம் தேவாலயம் அமைந்துள்ளது. கட்டுமானம் நடைபெற்று வரும் இந்த தேவாலத்தில் நேற்று முன்தினம் அதிகாலை வழிபாட்டிற்காக மக்கள் கூடியிருந்தனர்.

அப்போது திடீரென கட்டடத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்து விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தில் சிக்கி இதுவரை 36 பேர் பலியாகினர். மேலும் 200க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர். பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. மேலும், இறப்பு எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று அச்சம் எழுந்துள்ளது. எத்தியோப்பியா ஆப்பிரிக்காவின் இரண்டாவது அதிக மக்கள் தொகை கொண்ட நாடாகும். இந்நாட்டில் பாதுகாப்பு விதிமுறைகள் குறைவாக உள்ளதால் அடிக்கடி கட்டுமான விபத்துக்கள் நிகழ்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கத்தாரை தாக்கினால் பதில் தாக்குதல்: அமெரிக்கா கடும் எச்சரிக்கை



கத்தார் நாட்டின் மீது மற்ற நாடுகள் தாக்கினால் தக்க பதிலடி தரப்படும் என அமெரிக்கா எச்சரித்துள்ளது. கடந்த மாதம் கத்தாரில் உள்ள ஹமாஸ் தலைமையகம் மீது இஸ்ரேல் பயங்கர தாக்குதல் நடத்தியது. இந்நிலையில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கடந்த திங்கள்கிழமை(செப்.29) வாஷிங்டன் சென்றிருந்தார். அப்போது, கத்தார் பிரதமர் ஷேக் முகம்மது பின் அப்துல் ரஹ்மான் அல் தானியிடம் நெதன்யாகு மன்னிப்பு கோரினார். இந்நிலையில் வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில், “கத்தாரில் உள்ள பகுதிகள், இறையாண்மை, அரசு கட்டிடங்கள் உள்ளிட்ட உள்கட்டமைப்புகள் மீது பிற நாடுகள் தாக்குதல் நடத்தினால் அது அமெரிக்கா மீதான தாக்குதலாக கருதப்படும் ” என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## காற்றலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மன்னார் மூழ்குமாக இருந்தால் அது பற்றி வேதனை அடைபவர்கள், அதனை தடுத்து நிறுத்துபவர்கள் வேறு யாருமல்ல நாங்கள் தான்.

அதனால் இந்த காற்றாலை சம்பந்தமான பிரச்சினைக்கு உரிய மக்களுடன் பேசி கூடிய சீக்கிரத்தில் தீர்வுகளை பெற்றுக் கொடுப்போம் என்றார்.

## அர்ச்சுனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுப்பினர் இளங்குமரன் எம்பியிடம் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்

அனைத்து பகுதிகளிலும் இடம்பெறும் சட்ட விரோத தொழில்களை எவ்வாறு நிறுத்துவது என்பது எங்களுக்கு தெரியும்.

அதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா நாடாளுமன்றத்தில் நட்பு ரீதியாக என்னுடன் பல விடயங்களை பகிர்ந்து கொண்டார்.

அதில் முக்கியமாக அவர் தெரிவித்த விடயம் என்னவென்றால் லழரவரடிந என்னை வைத்து பணம் சம்பாதிக்கிறார்கள்.

அதனால் என்னை வைத்து பணம் சம்பாதிக்க நான் எவரையும் அனுமதிக்க மாட்டேன் ஆகவே நானே லழரவரடிந செய்து நல்ல வருமானத்தை பெற்றுக் கொள்கிறேன்.

ஆகவே அர்ச்சுனா இராமநாதனின் இலக்கு பணம் சம்பாதிப்பது. இன்று 15 கோடி புலம்பெயர் மக்களை ஏமாற்றி அவர் பணம் சம்பாதித்திருக்கிறார்.

ஆனால் இப்போது பணம் கொடுத்த புலம்பெயர் தேச மக்களும் கொடுக்காத மக்களும் அர்ச்சுனாவை பற்றி உணர்ந்து விட்டார்கள்.

அதனால் அவர்களுடைய தொடர்பு இல்லாததால் தற்போது அச்சுனா நாமலை வைத்து ஐஸ்லாந்து ஜனாதிபதி நாமலின் தலைமையின் கீழ் சுகாதார அமைச்சராக இருந்து கொண்டு எவ்வாறு பணம் சம்பாதிப்பது என்று கற்பனை காணுகிறார். ஆகவே அர்ச்சுனா இராமநாதனும் விரைவில் சிறை செல்ல நேரிடும்.

வெளிநாட்டு வாழ் உறவுகள் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தை பெற்றுக்கொண்டு அவர்களையே கேவலப்படுத்தும் ஒருவர் தான் இராமநாதன் அர்ச்சுனா.

புலம்பெயர் உறவுகள் தங்களுடைய தாய் நாட்டை கட்டி எழுப்புவதற்காக ஏதோ ஒரு நம்பிக்கையில் இராமநாதன் அர்ச்சுனாவிற்கு பெருந்தொகையான பணத்தை வழங்கினார்கள்.

அந்த நேரம் வேலை கிடைத்தால் போதும் என்று இருந்தோம். ஆனால் தற்போது சந்தோசமாக இருப்பதாக தன்னிடம் அர்ச்சுனா எம்பி கூறியதாக அவர் தெரிவித்தார்.

அவருக்கு இங்கு கட்சிக்காரியாலயம் என்று ஒன்றும் இல்லை. நாமலின் வீட்டில் இருப்பதாக நான் உணர்கிறேன்.

இவ்வாறு ஊழலில் ஈடுபட்ட இராமநாதன் அர்ச்சுனாவிற்கு வடமாகாண மக்கள் மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தில் தக்க பதிலடி கொடுப்பார்கள் என்று இளங்குமரன் எம்பி தெரிவித்தார்.

## தனக்குத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆசிரியரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

திருவையாறு மகா வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் குறித்த ஆசிரியர், கிளி-சென்திரேசா மகளிர் கல்லூரியின் ஆசிரியர் விடுதியில் தங்கியிருந்த வேளையில் தனக்குத் தானே தீ மூட்டி தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

சடலம் மீதான விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி ஜீவநாயகம் மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனைக்குப் பிறகு சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை மக்களின் நிலங்களை பறித்து அந்நிய நாடுகளுக்கு வழங்குவதா அபிவிருத்தி?, இயற்கையினை பாதிக்கும் அபிவிருத்தி திட்டங்கள் வேண்டாம், காற்றாலைக்காக பறவையினங்களை அழிக்கலாமா, மயிலத்தமடு மாதவனையையும் தாரைவார்க்கும் நோக்கமா?, போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

அத்துடன் ஜனநாயக ரீதியாக மன்னாரில் காற்றாலை திட்டத்திற்கு எதிராக போராட்டம் நடாத்தி வருவோரை பொலிஸார் தாக்கியமை அச்சுறுத்தியமை என்பது வடகிழக்கில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான அச்சுறுத்தலாகவே கருதுவதாகவும் ஆட்சிகள் மாறினாலும் அவர்களினால் முன்னெடுக்கப்படும் அடக்குமுறைகள் தொடர்வதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மட்டுமன்றி கிழக்கு மாகாணத்தில் திருக்கோவில், கதிரவெளி, குச்சவெளி, மூதூர் ஆகிய பகுதிகளில் முன்னெடுக்கப்படும் கனியமணல் அகழ்வுகளும் மக்களுக்கு ஆபத்தானது எனவும் திருகோணமலையில் முத்துநகர், சம்பூர் ஆகிய பகுதிகளில் முன்னெடுக்கப்படும் சூரிய மின்சக்தி திட்டங்களும் மக்களின் வாழ்வாதாரத்தினையும் விவசாயத்தினையும் அழிக்கும் திட்டங்கள் தேவையற்றுது எனவும் அனைத்தும் நிறுத்துவதற்கு அரசு நடவடிக்கையெடுக்க வேண்டும் எனவும் இதன்போது கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன



# இலங்கையின் சீர்திருத்தம் குறித்து சர்வதேச நாணய நிதியம் பாராட்டு!

இலங்கையின் விரிவான பொருளாதார சீர்திருத்தத் திட்டம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டுகிறது என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இது நெருக்கடிக்குப் பிந்தைய வலுவான மீட்சியையும் மேம்பட்ட நிதி ஆரோக்கியத்தையும் எடுத்துக் காட்டுகின்றது என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய அதன் தகவல் தொடர்பு பணிப்பாளர் ஜுலி கோசாக் மேலும் தெரிவிக்கையில்

சர்வதேச நாணய நிதியத்தின் குழு தற்போது இலங்கையின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் ஐந்தாவது மதிப்பாய்வை நடத்தி வருவதால் இந்த உத்வேகம் தொடர்கிறது.

இது நாட்டின் தொடர்ச்சியான நிலைப்படுத்தல் முயற்சிகளுக்கு ஒரு முக்கியமான படியாகும். 2025 ஜூலை 1, அன்று ஐஆகு நிர்வாகக் குழு நான்காவது மதிப்பாய்வை முடித்தது.

இலங்கையின் பொருளாதாரக் கண்ணோட்டம் குறிப்பிடத்தக்க வகையில் நம்பிக்கைக்குரியதாக உள்ளது.

பணவீக்கம் குறைவாகவே உள்ளது, அரசாங்கத் தரப்பிலிருந்து வருவாய் வசூல் மேம்பட்டு வருகிறது, சர்வதேச கையிருப்பு தொடர்ந்து குவிந்து வருகின்றன,

நெருக்கடிக்குப் பிந்தைய வளர்ச்சி 2024 இல் 5 சதவீதமாக மீண்டுள்ளது, இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும். வரவுசெலவுத் திட்டத்தில் வருவாய்-மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 2022 இல் 8.2 சதவீதத்திலிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13.5 சதவீதமாக மேம்பட்டுள்ளது.

இலங்கையின் முன்னேற்றம் பாராட்டத்தக்கது என்றாலும், நிதி இடம் மற்றும் வெளிப்புற இடையகங்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட சீர்திருத்தங்களுக்கு தொடர்ந்து அர்ப்பணிப்பு தேவை.

உலகளாவிய வர்த்தகக் கொள்கை சூழல் நிச்சயமற்றதாகவே உள்ளது, இது இலங்கை கவனமாக கொள்கை பதில்களுடன் நிர்வகிக்க வேண்டிய அபாயங்களை ஏற்படுத்துகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## வாகனங்களை ஒப்படைக்கும் மகிந்த – உயிராபத்து ஏற்படும் என்ற அச்சத்தில் குடும்பத்தினர்

ஷகொழும்பு, ஒக் .03

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட இரண்டு வாகனங்களில் ஒன்று இன்று அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளமையினால் அவரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்பு சலுகைகள் நீக்கப்பட்டுள்ள நிலையில், மகிந்த ராஜபக்ச கொழும்பிலுள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேறி தங்காலையில் உள்ள கார்ல்டன் இல்லத்தில் குடியேறியுள்ளார்.

அதற்கமைய, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு வழங்கப்பட்ட வாகனங்களும் ஒப்படைக்கப்படவுள்ளன.

2015 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு குண்டு துளைக்காத கார் மற்றும் டொயோட்டா லேண்ட் ரோவர் வழங்கப்பட்டன.

குண்டு துளைக்காத கார் பழுதுபார்ப்பதற்காக பல மாதங்களாக மாத்தறையில் வாகனம் பழுது பார்க்கும் இடத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. மேலும் பழுதுபார்ப்பு பணி இன்னும் முடிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில், வாகனத்தை ஏற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி செயலகத்திற்கு மகிந்த தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. லேண்ட் ரோவர் நேற்று தங்காலையிலிருந்து கொழும்புக்கு ஒப்படைக்கப்பட்ட நிலையில் இன்று அரசாங்கத்திடம் ஒப்படைக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, குண்டு துளைக்காத வாகனம் இல்லாததால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு குறித்து அச்ச நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் போக்குவரத்துக்காக இரண்டு ஓட்டுநர்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருந்தனர்,

மேலும் இந்த இரண்டு நியமனங்களும் நேற்று முன்தினம் முதல் இரத்து செய்யப்பட்டுள்ளதா தெரவிக்கப்படுகின்றது. (ஐ)

# வாழ்க்கையின்....

பார்ப்பதைவிட சவால்களாகப் பார்க்கலாம். ஏனென்றால், இந்தச் சவால்கள்தாம் நம்மை அடுத்த நிலைக்கு உயர்த்தி செல்கிறது.

உதாரணமாக, பணக்கஷ்டம் வந்த வந்த பின்னர்தான், எப்படிப் பணம் சம்பாதிப்பது, எப்படிச் சேர்த்து வைப்பது, எப்படி முதலீடு செய்வது என்பது குறித்து கற்றறிந்து இருப்போம். உடல் நிலையில் ஏதோ பிரச்னை வந்த பிறகுதான், தினமும் உடற்பயிற்சி செய்வதை வழக்கப்படுத்தி இருப்போம்.

இதே போல்தான் ஒவ்வொரு பிரச்னையையும் சவால்களாகக் கையாளும்போது, அடுத்த நிலைக்கு முன்னேற்றிச் செல்லும். குறைகளாக, பிரச்னைகளாகப் பார்த்தோமேயானால் குழப்பங்கள் மட்டுமே எஞ்சி இருக்கும்.

வாழ்க்கையில் சவால்கள் இருக்கவே செய்யும். அதுதான் வாழ்வின் குணம். ஆனால், அவற்றின் தன்மையே உங்களை மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் இட்டுச் செல்வதுதான்.

சவால்களில் இருந்து நீங்கள் கற்றுக்கொண்டு, உங்களை எதிர்கால சவால்களுக்குத் தயார்படுத்திக்கொள்ளலாம்.

சில நேரத்தில் நம் வாழ்க்கையின் சவால்களை நாம் தேர்ந்தெடுக்கவும், நிர்ணயிக்கவும் வாய்ப்புகள் இருப்பதில்லை. ஆனால், வளர்ச்சிப் பாதையின் திசையை நாம் கண்டிப்பாக நிர்ணயிக்க முடியும். வளர்ச்சியாக மாற்றிக்கொள்வதும் தளர்ச்சியாக ஆக்கிக்கொள்வதும், நம் கையில்தான் உள்ளது.

சரி, சவால்கள் இல்லாதவர்களே இல்லையா? ஏன் இல்லை, அவர்கள் கல்லறையில் உறங்கிக்கொண்டிருக்கிறார்கள், வாழ்க்கை கொடுத்த சவால்களை எல்லாம் சந்தித்த பின்னர்.

அப்படி என்றால் துன்பமும் பிரச்சினைகளும் நிறைந்ததுதாம் வாழ்க்கையா?

உண்மையில் ஆசீர்வாதங்கள் நிறைந்ததுதாம் வாழ்க்கை. ஒவ்வொரு காலகட்டத்திலும், வாழ்க்கை தந்த கொடைகளும் நன்மைகளும் நம் கண்களுக்குத் தெரிவதில்லை. மாறாக, குறைகளே உறுத்தலாக தெரிந்துகொண்டிருக்கும்.

கொஞ்ச நேரம் கண்களை மூடிச் சிந்தித்துப் பாருங்கள். இந்தக் காலம், இப்போது வாழ்க்கையில் நீங்கள் நின்றுகொண்டிருக்கிற இந்த இடம், உங்கள் வாழ்க்கையின் மிகச் செழுமையான, இதுவரை கடந்து வந்த பாதையின் செழிப்புமிக்க பகுதியாகவே இருக்கும்.

மிகவும் எளிமையாகச் சொல்லப்போனால், நம் முன்னோர்கள் அனுபவித்திராத எவ்வளவோ வசதிகளையும் ஆடம்பரங்களையும் வாழ்க்கை, இந்தக் காலகட்டத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் நமக்குத் தந்திருக்கிறது. அவையெல்லாம் வாழ்க்கையின் கொடைகள் தாமே?

மகிழ்ச்சிக்கான காரணங்கள் நிறைந்த வாழ்க்கையில் சில சவால்களும் இருக்கத்தான் செய்கின்றன. ஏனென்றால், நாம் எல்லாருமே, எல்லாருடைய வாழ்க்கையுமே 'நிசகநஉவடல ஐஅிநசகநஉவ. அதுவே வாழ்க்கையின் பூரணத்துவம். அதுதான் முழுமையானதும் கூட!

எனவே, நிறைகளைப் பாராட்டி, குறைகளைச் சவாலாக ஏற்று, சவால்கள் அனைத்தும் நம்மை வளர்ச்சி பாதைக்குக் கைப்பிடித்து அழைத்து செல்ல வந்த நம்பகமான வழிகாட்டிகள் என்பதை உணர்ந்து, சவால்களுடனே வாழ்வை, வாழ்க்கையின் பூரணத்துவத்தைக் கொண்டாடலாம் வாங்க!







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.10.2025 வெளியிடப்பெற்றது.